

திரைப்படத் தயாரிப்பாளர், விநியோகஸ்தர் கே.ராஜன் அவர்கள் மறைவெய்திய நிலையில் சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மறைந்த கே.ராஜன் அவர்களுடைய உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். தமிழ்த் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்காக தொடர்ந்து குரல் கொடுத்த கே.ராஜன் அவர்களுடைய மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்! அவரது மறைவுக்கு என் ஆழ்ந்த இரங்கல் என்றும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

### சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதியில்

# முன்னாள் அமைச்சர் இரா.ராஜேந்திரன் வாக்காளர்களுக்கு நன்றி!

சேலம், மே 19-

அனைத்து தரப்பு மக்களுக்குமான ஆட்சியை நடத்தி திட்டங்களை வகுத்து அளித்தவர் தி.மு.க. தலைவர் என்று முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் புகழாரம் சூட்டினார்.

தி.மு.க. தலைவர் உத்தரவிற்கிணங்க சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் ராஜேந்திரன் வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக கன்னங்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட மாரியம்மன் கோவில் திடலில் வாக்காளர்களை நேரில் சந்தித்த முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் கடந்த ஐந்து ஆண்டுகளாக மகளிர் மாணவர்கள் தொழிலாளர்கள் நெசவாளர்கள் விவசாயிகள் என அனைத்து தரப்பு மக்களுக்குமான திட்டங் களை நிறைவேற்றி இந்தியாவே வியக்கும் வகையில் ஆட்சி நடத்தியவர் தி.மு.க. தலைவர் என்று பேசிய அவர், தற்போது வெற்றி வாய்ப்பை இழந்தாலும் மக்களுக்கான பணியில் தொடர்ந்து ஈடுபடுவோம் என்றும் தி.மு.க. என்பது மக்களுக்கான இயக்கம் என்றும் பெருமிதத்தோடு கூறிய அவர் கடந்த ஐந்து ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துரைத்து வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கன்னங்குறிச்சி பேரூர் கழக செயலாளர் தமிழரசன் பொதுக்குழு உறுப்பினர் நாசர்கான் சேலம் மாநகர செயலாளர் ரகுபதி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### 140 வது வார்டு மாமன்ற முன்னாள் உறுப்பினர்

# சைதை இரா.லோகநாதன் 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி!

## காக்கும் கரங்கள் கருணை இல்லத்தில் உணவு வழங்கல்!



சென்னை, மே 19 -

சென்னை மாநகராட்சி மாமன்ற முன்னாள் உறுப்பினர் சைதை இரா. லோகநாதன் 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி 21.5.2026 - வியாழக்கிழமை அன்று நடைபெறுகிறது.

சைதை இரா.லோகநாதன் இளமை பருவத்திலிருந்து கழகத்தில் ஈடுபாடு கொண்டு சைதை பகுதிக் கழகத்தில் வட்டச் செயலாளராகவும், பகுதி துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழக பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மாமன்ற முன்னாள் உறுப்பினராக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று தளபதி அவர்களின் நன்மதிப்பை பெற்றும், தளபதி அவர்கள் மேயராக இருந்த பொழுது பல்வேறு பணிகளை செய்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

சைதை கூட்டுறவு வங்கி இயக்குனராகவும், மாந்தோப்பு ஆண்கள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சைதை இரா.லோகநாதனின் 11 ஆம் ஆண்டு நினைவு நாளில் காக்கும் கரங்கள் முதியோர் இல்லம் ரெயின்போ பார்டர் ரோடு, மேற்கு மாம்பலம், கருணை இல்ல மன வளர்ச்சிக்குன்றிய குழந்தைகள், மேற்கு சைதாப்பேட்டையில் உள்ள கருணை இல்லத்தில் பால், பிஸ்கட், கிரீம் காலை உணவும், காசி விஸ்வநாதர் கோவிலில் மதியம் அன்னதானமும் அஜிஸ் நகர் அன்னை முதியோர் இல்லத்தில் பகல் 12 மணிக்கு உணவும்எல். பி.செல்வம், லயன்ஸ் கிளப் லோ.ஜெயராமன் ஆகியோரின் நிகழ்ச்சி ஏற்பாட்டில் வழங்கப்படுகிறது.

இதில் வட்டக் கழக முன்னோடிகள், கழக தொண்டர்கள், அன்னாரது குடும்பத்தி னர் கலந்து கொள்கின்றனர்.

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், 21-5-2026 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில், எனது தலைமையில் துணைத் தலைவர்கள் போஸ்வெங்கட், எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் - செயலாளர்கள் மா.உமாபதி, இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என்.தில்லைசெல்வம் - துணைச் செயலாளர்கள் கவிஞர் நன்மாறன், எழில்மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன், எம்.எஸ்.ஹரிபாபு, என்.எஸ். மாதேஷ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்க சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. ஜூன்-3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்

2. கழக ஆக்கப்பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.05.2026

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஆ.மணி எம்.பி. அறிக்கையின் படி பென்னாகரம், தருமபுரி, அரூர் சட்டமன்றத் தொகுதிகளில் கள ஆய்வுக்குழுக் கூட்டம் **சி.என்.அண்ணாதுரை எம்.பி., திருமதி ரத்னா லோகேஸ்வரன்** ஆகியோர் தலைமையில் கீழ்க்கண்டவாறு நடைபெறவுள்ளது.

| வ.எண் | சட்டமன்றத் தொகுதி | நாள் | இடம் |
|---|---|---|---|
| 1. | பென்னாகரம் | 28.05.2026 வியாழக்கிழமை | குமார் மஹால் , B.அக்ரஹாரம் |
| 2. | தருமபுரி | 29.05.2026 வெள்ளிக்கிழமை | ஜோதி மஹால், தருமபுரி |
| 3 | அரூர் | 30.05.2026 சனிக்கிழமை | ஆசியா மஹால் , அரூர் |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 18.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தற்கிணங்க

# நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக்கு வரும் குழு விவரம்

## ச. முரசொலி – செ.உமாராணி அறிவிப்பு!

| கழக மாவட்டம் | தொகுதி விபரம் | நாள் | இடம் |
|---|---|---|---|
| இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 20.05.2026 | பீமாஸ் ஹோட்டல், பாரதி நகர் |
| | திருவாடானை | 21.05.2026 | குட்லக் மஹால், திருவாடானை |
| | பரமக்குடி | 22.05.2026 | AP sha மஹால், பரமக்குடி . |
| | முதுகுளத்தூர் | 23.05.2026 | காலை — சர்வ விநாயக சாய் மஹால், முதுகுளத்தூர் மாலை— வேலம்மாள் மஹால், கமுதி |
| தூத்துக்குடி தெற்கு | திருச்செந்தூர் | 24.05.2026 | IMA ஹால், திருச்செந்தூர் |
| | திருவைகுண்டம் | 25.05.2026 | பாலாஜி திருமண மண்டபம், பொன்னங்குறிச்சி, திருவைகுண்டம் |
| | ஓட்டப்பிடாரம் | 26.05.2026 | சத்யா மஹால், புதுக்கோட்டை |
| தூத்துக்குடி வடக்கு | விளாத்திகுளம் | 27.05.2026 | G V மஹால் - விளாத்திகுளம் |
| தென்காசி வடக்கு | சங்கரன்கோவில் | 29.05.2026 | AvRmV திருமண மஹால், ரயில்வே பீடர் சாலை சங்கரன்கோவில் |
| தூத்துக்குடி வடக்கு | கோவில்பட்டி | 30.05.2026 | நந்தினி மஹால் - கோவில்பட்டி |
| | தூத்துக்குடி | 31.05.2026 | கலைஞர் அரங்கம் - தூத்துக்குடி |
| தென்காசி வடக்கு | வாசுதேவநல்லூர் | 04.06.2026 | தேவர் திருமண மஹால் - சிவகிரி |

**ச.முரசொலி**
தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர்

**செ.உமாராணி**
மாநில அயலக அணி துணைச் செயலாளர்

### தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றியப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், மே.19-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (20.5.2026 புதன்கிழமை) அன்று மாலை 4.30 மணியளவில் படப்பை முத்து மஹாலில் (CNC மஹால்) எனது ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன்) தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் திருமதி.சரஸ்வதி மனோகரன், திருமுடிவாக்கம் ஏ.மணி, ஏ.வந்தே மாதரம், திருமதி உமாமகேஸ்வரி வந்தே மாதரம், வ.நந்தகோபால், சி.பார்த்தசாரதி, மூ.ராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமுதா சுமன், டி.லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு, ஆகியோர் முன்னிலையில் வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட- ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், ஒன்றிய பிரதிநிதி, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.ஜூன்.3 முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள் 103வது பிறந்த நாள் விழா.

2.மே.22 வல்லக்கோட்டை ஆர்.எம்.திருமண மண்டபத்தில், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட சட்டமன்ற தேர்தல் முடிவு குறித்து கள ஆய்வுக் குழுவினர் வருகை

3. கழக வளர்ச்சி

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மாங்காடு நகரக் கழக அவசர ஆலோசனைக் கூட்டம்!

## நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், மே 19

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மாங்காடு நகரக் கழக அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (19.05.2026 செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணி அளவில் நகர கழக அவை தலைவர் எம். எஸ். மகேந்திரன் தலைமையில் மாங்காடு நகர தி. மு.கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எனவே நகர கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு கழக செயலாளர்கள் நகர மன்ற உறுப்பினர்கள் BLA2 நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு:

ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழா.

மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



காஞ்சி வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி 61 வது வார்டு அவை தலைவரும் முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினருமான கே.இரவி அவர்கள் 15.05.2026 அன்று அதிகாலை மறைவெய்தினார். அன்னாரின் உடலுக்கு காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் – முன்னாள் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் மலரஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிதியுதவி வழங்கினார். இதில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர், பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயகுமார், வட்டக் கழகச் செயலாளர் ஆர்.மஞ்சுநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் அறிவிப்பின்படி

கள ஆய்வுக் குழுவினர் மூத்த வழக்கறிஞர் ஜே.ரவிந்திரன்,

ஈரோடு ஜெ.வீரமணி (மாநில மாணவர் அணி செயலாளர்) ஆகியோர், சங்கராபுரம் மற்றும் உளுந்தூர் பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கு வருகை தருகின்றனர். அதுசமயம் காலை 9:00 மணி முதல் 1:00 மணி வரை.

**சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி:**

19-05-2026 செவ்வாய்க்கிழமை, என்.எஸ்.கே. திருமண மண்டபம், மேலேரி, சங்கராபுரம்.

**உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி:**

22-05-2026 வெள்ளிக்கிழமை லலிதா சக்கரவர்த்தி திருமண மண்டபம், உளுந்தூர்பேட்டையில் நடைபெறுகிறது.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.